உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உஎ.] சுக்கில௵ ஆடி௴ [பகுதி—கூ.

Vol. XXVII. *July-August-1929.* No. 9.

## மெய்ம்மை.

மெய்ம்மைஎனப்படுவது—உண்மையுரைத்தலும், உளதாந்தன்மையு மாம். மெய்ம்மை வாய்மை உண்மை என்பன தமிழில் ஒருபொருட்பன் மொழிகளாக வழங்கப்படுகின்றன; எனினும் உற்றுநோக்கில் இவை தம்முட் சிறிது பொருள்வேற்றுமையும் இனிதுவிளங்கும். உண்மை—உளதாயிருப்பது; வாய்மை—என்றும் யாண்டும் நன்றுபடப்பேசுவது; மெய்ம்மை—நிலைத்த உண்மைத்தன்மையாம்.

பொய்ம்மையின்மறுதலை மெய்ம்மையேயாம். 'பொய்' நன்மை பயப்பினும் பொய்யன்றி மெய்யாவதில்லை. அதுவேபோல், கேடுதரினும் 'மெய்' பொய்யெனப்படுதலின்று. மன்னிய தன்னியல்பும் பொருண்மை யுமே சுட்டுமல்லாற் பெரும்பாலும் தமிழ்ச்சொற்கள் இடந்தோறும் மாறுபடும்பயனைக்கொண்டு பெயராக்கம்பெறுதலில்லை. ஒருபொருளுக் கொருசொல்லும், ஒவ்வொருசொல்லுக்கும் தகவுடைய தனியொரு பொருளுமாக நிற்பதுவே மொழிவழக்கின் பெருநோக்கும் தத்துவமு மாக அமையும். அதைவிட்டுப் பொருளுடைய சொற்களுக் கவை சுட்டும் பொருளைவிட்டுக் கால இட நிகழ்ச்சிகளால் மாறுபடும் நிலையற்ற

பயன்களையே சொற்களுக்குப் பற்றுக்கோடாக்கின், தமிழ்மொழிகள் அலமருத்தும் அளவற்ற ஐயக்களங்களாகிவிடும். இனிது தவுமிட னெல்லாம் 'பொய்'ச்சொல் மெய்ம்மைப்பெயர்க் குரிமைகொள்ளுமாயின், இருமொழியும் நிலைதவிர்ந்து பொருள் மருளும் இழிவுபூணும். தன் தன்மையன்மைதரும் பெயராக்கம் தமிழகத்தில் மரபில்லை, வழக்கு மில்லை.

தமிழிற் சொல்லாக்கம் பொருண்மைபற்றியன்று, பயன்பற்றியதே யாமென வாதிப்பவரும் சிலர் உளர். அவர்,—

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

எனுங் குறளைத் தமக்குரிய சுருதியாக்கித் தங்கோள் நிறுவ முயல்வர். அதுவே வள்ளுவர்க்கும் கருத்தாமேல், வள்ளுவர்வாக்கையும் தள்ளத் துணியும் உள்ளத்தாமே தமிழ்மரபாகும். ஆனால், இறவாக்குறளுடை யாரும் இழுக்குரையான்றோ? பொய்ம்மை யாண்டும் எதுகொண்டும் மெய்யாமாறுமில்லை. அதனால் இவ்வருங் குறள் தரும் பொருள் பிறிதா வது ஒரு தலையாகும். இனி இதனைச் சிறிது ஆராய்வாம்.

இக்குறளில் நாயனாரின் பொருணோக்கும் சொற்போக்கும் சிந்திக் கற்பாற்று. முதலில், யாண்டும் பொய்ம்மை நன்மைபயக்குமென்பதைக் குறளுடையார் தமக் குடன்பாடாகக்கொள்ளாமை கருதவேண்டும். 'எனின்' எனும் இன்மை சுட்டும் வலியசொற் பெய்து, பொய்ம்மை நன்மைபயவாமையைத்தெளித்துவைத்தார். மீண்டும் அவர் பொய்புரைப் பார் தமக்குப் பொய்யின்வழியாக் கருதும் பயனெல்லாம் புரைபுகுந்த புன்மை யென வலியுறுத்தி, அதைவிலக்க "புரைதீர்ந்தநன்மைபயக்கு மெனின்" எனத் தெரித்தசொல்லால் விரித்துரைத்துத் தம்மிதயம் விளங்கவைத்தார், தன்னலங்கடந்த நன்னலம்பயக்கப் பொய்யுதவு மிடம்

காலம் வாய்க்குமென வாதிப்பார்மதம்பேணி, அவ்வாறு வாய்க்குமாயின் ஆண்டு அதனைத் தீதுதரும் பொய்போலக் கடிவதிலை யென்பதுவே வள்ளுவரின் கருத்தல்லால், அவ்விடத்தும் பொய்ம்மைதனை மெய்ம்மை யெனப் பேச இடம் தருவது அவர்க் குடன்பாடில்லை. அதனாலன்றே "பொய்ம்மையும் புரைதீர்ந்த நன்மைபயக்குமெனின் வாய்மையிடத்த" எனக் கூசிப்பேசலன்றி, பொய்ம்மையும் வாய்மையாகு மெனவாதல், வாய்மையைப்போற்போற்றற்பாற்றெனவாதல் இக்குறளுங் கூறிற்றில்லை.

அதுவுமன்றி, ஈண்டுப் 'புரைதீர்ந்த நன்மைபயக்கும் பொய்யுள தேல், அப்பொய்யை நன்மைதரும் வாய்மையிடத்தில் வைக்கலாகும்' என்று, அதனை ஒருபடியாப் பிறர்மதம்பேணிக் கொண்டமைக்க ஒருப் பட்டவள்ளுவரும், தம் குறளில் 'மெய்ம்மையிடத்த', 'உண்மையிடத்த' என்னாமல், வாய்மையிடத்த என விதந்துகூறியது குறிக்கற்பாற்று. 'பொய்ம்மை'க்கு மறுதலைச்சொல் மன்னிய 'மெய்ம்மை' யொன்றே. ஆக்கினும் நூக்கினும் 'மெய்' யாண்டும் மெய்யேயாம். அதுவேபோற் பொய்ம்மையும் கேடற்ற நலம் தரினும் பொய்ம்மையேயாம். இல்லறவிய லில் எல்லோர்க்கும்,

"இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என வாய்க்கணியாம் நன்றிபயக்கு மின்சொல்லை வற்புறுத்திப்போந்த வள்ளுவர், துறவியலில் "பயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று, பண் பிற் றலைப்பிரியாச் சொல்" லாகும் வாய்மையை வலியுறுத்துமிடத் திக் குறளைப் பெய்துவைத்தார். இதற்கு முதற்குறளதனில், பிறழாத மெய்ம்மையைப்பேசத் தான் இடம்பெறவில்லை, "நல்லவைநாடி இனிய சொல்லும் பெற்றியே சொல்வழக்கும் வாய்க்கு 'அணி, அல்ல மற்றப் பிற' " என்னு மின்னுறுதியையே ஈண்டு வலியுறுத்தும் விருப்புடையார் என்பதை இக்குறளால் வள்ளுவர் ஐயமற விளக்கியுள்ளார்.

"வாய்மை யெனப்படுவ தியாதெனின், யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்"

என்று வாய்மைக்குத் தாம் கொண்டபொருளை முதலிலேயே மருளறத் தெரித்துவைத்தார். மன்னிய மெய்ம்மையும் மருளற்ற உண்மையும் இக்குறளில் நாயனர் சுட்டவரவில்லை. 'யார்மாட்டும் இன்புறாஉம் இன்சொ'லாம் வாய்மைக்கு, "யாதொன்றும் தீமையிலாத சொலல்" என அதிகார ஆரம்பத்திலேயே இலக்கணம் வகுத்துக்கொண்டார். இப் பெற்றி நோக்காமல், பயன்படுங்கால் பொய்மையும் நாயனர் மெய்யெனப் புகல்வதாகக்கொள்ளுவது பொருத்தமன்றும்.

இனி, பயனையே கருதாமல் யாண்டும் மெய்பேச மேற்கொள்வது அறவொழுக்கும் அறிவுமாமா? என வினவுவார்க்குரியவிடை அவர் நூலிலேயே உய்த்துணரக் கிடைப்பதொன்றும்.

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என முழங்கும் வள்ளுவர்மெய்யுளத்திற் கள்ளமில்லை. சமுதாயவாழ்க் கையினில் தம் நலம் தவிர்த்துப் பிறர்நலம்பேணுவதே பெருநோக்காம். அதனல், 'புரைதீர்ந்த நன்மைபயக்க' 'யாதொன்றும் தீமையிலாத' சொல்லுவதைக் கடிதலில்லை. அறத்துறையிற் பொய் மெய்யாப்போதரு மெவ்வழியு மில்லை மெய்ம்மையொன்றே என்றுமரு மெய்ம்மையாகும். இறவா மெய்யறத்துடனே ஒல்லும்வ யெல்லாம் ஒப்புரவும் உலகொழுக் கும் ஓம்பல்வேண்டும்; தன்னலமும் பிறர்கேடும் தணத்தல்வேண்டும்; தமக்கன்றிப் பிறர்க்குழைக்கும் வாழ்வுகக்கப் பயிலல்வேண்டும். இத் துறைகள் கைகூடில் ஒழுக்கத்திற் கிழுக்கில்லை, அறத்தோடு பிணக்கு மில்லை.

ச. சோமசுந்தரபாரதி.

# தொல்காப்பியச்சூத்திரப்பொருளாராய்ச்சி.

[உ௬0-ம்பக்கத்தொடர்ச்சி.]

ஆசிரியர் தொல்காப்பியனுர் வேற்றுமைமயக்கத்தைத் தம்பொருளிற்றீராது பிறிதுபொருட்கண்வரும் பொருண்மயக்கமும், தம்பொருளிற்றீர்ந்து பிறிதுபொருட்கண்வரும் உருபுமயக்கமுமென இரண்டாக வகுத்துக்கூறியுள்ளார். அங்ஙனங்கூறுங்காற் பொருண்மயக்கத்தைத் தொகையிலும் தொடரிலும் உருபுமயக்கத்தைத் தொடரினும்வைத்துணர்த்தியுள்ளார். பொருண்மயக்கத்துட் சிலவற்றைத் தொகையிலும் சிலவற்றைத் தொடரினும்வைத்து உணர்த்துவான் ஏன்? யாவற்றையுந் தொடரில்வைத்துணர்த்தினுலென்னை எனின், அங்ஙனமுணர்த்தின் அம்மயக்கந் தொகைக்கண் எவ்வாறுமென மாணுக்கனுக்கு ஐயம் நிகழும். ஆதலின் அவ்வையம் நீக்குமாறு தொக்குவருவனவற்றைத் தொகைக்கண்ணும் தொகாதுவருவனவற்றைத் தொடர்க்கண்ணும் வைத்துணர்த்தினுரென்பது. இதுபற்றியே சேனுவரையரும் "இதனதிதுவிற்றென்னுங்கிளவியும்" என்னுஞ் சூத்திரவுரைக்கண் "இதுவும் வேற்றுமைமயக்கமாதலின் மேற்கூறப்பட்டவற்ருேடு ஒருங்குவையாது இத்துணையும் போதந்துவைத்ததென்னையெனின் அது தொகைவிரிப்ப மயங்குமதிகாரம், இது தொகையல்வழி யானையதுகோடு கூரிது என்னுந் தொகைப்பொருள் சிதையாது யானைக்குக் கோடு கூரிது என நான்காவ தாண்டுச் சென்றுநின்றதாகலான் அவற்ருேடு வையாராயினுர் என்பது" எனக் கூறினுரென வுணர்க. இன்னும் வடமொழிக்கட் போலன்றித் தமிழ்மொழிக்கட் பெயரோடு தொழிலுந் தொகுமாதலின் அவ்வழக்குப்பற்றியும் மாணவர்க்கு இனிதுவிளங்கத் தொகைக்கண் வைத்துணர்த்தினுரெனவு முணர்க. ஆசிரியர் தொகைக்கண்வைத்தே இம்மயக்கமுணர்த்தினுரென்பது "கருமமல்லாச் சார்பென் கிளவிக்— குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை" என்னுஞ் சூத்திரமுதலாக "அச்சக் கிளவிக் கைந்து மிரண்டு—மெச்ச மிலவே பொருள்வயினுன" என்ப திறுதியாகவுள்ள சூத்திரவிதிகளெல்லாம் தொகைவிரி மயக்கத்திற்கேற்றவாறு வருதலானும், "உருபுதொடர்ந் தடுக்கிய

வேற்றுமைக் கிளவி—யொருசொ னடைய பொருள்சென் மருங்கே" என்னுஞ் சூத்திரமுதலாக "வினை யுருபு மன்ன மரபின—மான மிலவே தொன்முறை யான" என்னுஞ் சூத்திர மிறுதியாக உள்ள சூத்திரங்க ளெல்லாம் தொடர்மொழிக்கட்படுவனவற்றையே விதிப்பனவாக வருத லானும் அறியக்கிடத்தல் காண்க.

இனி, உரையாசிரியர்க்கும் பொருண்மயக்கத்தைத் தொகைக்கண் ணும் வைத்து ஆசிரியர் உணர்த்தினரென்பதே கருத்தாதல் "இரண்டன் மருங்கி னோக்க னோக்க—மிரண்டன் மருங்கி னேதுவு மாகும்" என்னுஞ் சூத்திரவுரையுள், "வானோக்கிவாழும்" என்னுந் தொகையையே உதாரணமாகத் தந்து விரித்துக்காட்டலானும் "ஓம்படைக்கிளவிக்கு" என்னுஞ் சூத்திரவுரையுள் "தொகைவருகாலை" என்பதை யாண்டும் ஒட்டிக்கொள்க என்பதனானும், "குத்தொகவரூஉம்" என்னுஞ்சூத்திர வுரையுள் 'நாகர்பலி என்பது தொக்குநின்றது, ஆண்டு ஆறாவதுமாக' வெனக் கூறியவதனானும் அறியப்படும். அன்றியும் உரையாசிரியர்க் கது கருத்தன்றாயின் சேனாவரையர் அவரை யாண்டாயினும் மறுத்துக்கூறி யிருப்பர். அங்ஙனங் கூறாமையானும் உரையாசிரியர்க்கும் அதுவேகருத் தாதல் துணிபு. ஆதலின் தொகை தொக தொகா என்பன சமாசனையே உணர்த்திவந்தபதங்களென்பது துணிபாம். நிற்க.

இனித் தொகைமுதலியபதங்கள் சமாசனையே உணர்த்திவந்தன வென்பதை யாம் முற்கூறியவாறு அவ்வச்சூத்திரங்களுள்வைத்து ஆராய்ந்துகாட்டுதும்.

> "அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
> அதுவெ னுருபுகெடக் குகரம் வருமே"

என்னுஞ் சூத்திரத்துள் வருந் தொகை என்பது உரையாசிரியர்மதப் படி சம்பந்தப்படுதல் என்னும் பொருளில் வருவதாகக் குறிப்பாசிரியர் கூறியுள்ளார். உரையாசிரியரோ, முதலடிக்கு, ஆறும்வேற்றுமைக்குரிய முறைப்பொருள் உயர்திணைக்காயின் எனக் கருத்துரைகூறியுள்ளார்; அன்றி அதன் பதப்பொருள்கூறினாரல்லர். ஆதலின் உயர்திணைக்காயி னென்பதற்கு உயர்திணைத்தொகைக்கண் வருமாயின் என்பதே பொருளாகும். முறைப்பொருள் உயர்திணைத்தொகைக்கண்ணும் அஃறிணைத்தொகைக்கண்ணும் வருதலின் அவ்வாறுகூறினார். குறிப்

பாசிரியர்கூறியவாறு சம்பந்தப்படுதல் என்னும் பொருளிற்றொகையென்பது வந்ததாயின் அது விரியுங்கால் உயர்திணையொடு தொகைவயின் என விரிந்துநிற்றல்வேண்டும். அவ்வாறுநில்லாமையின் அது பொருந்தாதென்பது. அன்றியும், சம்பந்தப்பட்டவிடத்து என்று குறிப்பாசிரியர் கூறியுள்ளார். அங்ஙனம் பெயரெச்சப்பொருள்படுதற்குத் தொகைவயின் என்ற பாடம் பொருந்தாது. உயர்திணையொடு தொகுவயின் என்றிருத்தல்வேண்டும். அங்ஙனம் ஆசிரியர் சூத்திரியாமையின் அவர்கருத்து நிரம்பாதென்பது. அன்றியும், தொகை என்பது உரையாசிரியர்கருத்தன்றாயிற் சேனாவரையர் மறுத்திருப்பர். மறுக்காமையானும் அவர்க்கும் அதுவே கருத்தென்பது பெறப்படும். ஆதலிற் றொகை சமாசமென்பதே ஆசிரியர்கருத்தாதல் துணிபு. அங்ஙனேல் உயர்திணைத்தொகைக்கண் அதுஉருபு வருவது வழூவென்பது பெறப்படாதன்றோவெனின், நன்றுசொன்னாய்! தொகை என்றது உயர்திணைத்தொகை என்றதனால் அது வழூவாதல் பெறப்படுமென்பது. உயர்திணைத்தொகை என்பது உயர்திணைப்பொருளோடு தொக்கதொகை என்றாவது உயர்திணைப்பொருட்கட்டொக்கதொகை என்றாவது விரியும். அங்ஙனம் விரியவே அது உருபு வாராமைக்குக்காரணம் உயர்திணைப்பொருளோடுதொக்கமை என்பது பெறப்படும். ஆதலின் வழூவென்பது பெறப்படாமை யாண்டையது என்பது. உயர்திணைத்தொகை என்பது பின்மொழிநிலையல். "உயர்திணை யும்மைத் தொகை பலரீறே" என நன்னூலாரும் இங்ஙனமே பின்மொழிநிலையலாகக் கூறுதல் காண்க. இதுபற்றியே சேனாவரையரும் "உயர்திணைத் தொகைவயினதுவெனுருபுகெடக் குகரம்வருமென்றதனால் ஆறனுருபு அஃறிணைப்பாறேன்றநிற்றல் பெற்றாம்". எனக் கூறியதூஉ மென்க. உயர்திணைத்தொகைக்க ணதுவெனுருபுகெடக் குகரம்வருமெனவே அஃறிணைத்தொகைக்கண் இரண்டும்வரும் என்பது பெற்றாம். இரண்டும் வருமென்பது "முறைகொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்" என்பதனாற் கூறுப. ஆதலிற் றொகைக்கண் எவ்வுருபுவிரித்தாலென்? என்னும் ஆக்ஷேபம் பொருந்தாதென்பது.

இனி, "ஓம்படைக் கிளவிக் கையு மானும்
தாம்பிரி விலவே தொகைவரு காலை"

என்பது சூத்திரம். இச்சூத்திரக்குறிப்பில், 'புலிபோற்றிவா' என்னுந் தொடர்க்குப் பொருள் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு 'புலியைப் போற்றிவா' என்றாவது 'புலியாற்போற்றிவா' என்றாவது கொண்டவிட

லாம் என்று குறிப்பாசிரியர் கூறினர். இது செயப்படுபொருட்கண் ஏதுப்பொருள்வந்த மயக்கமேயன்றிப் பொருளால் வேறுபாடுடையதன்று. ஆதலிற் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு கொண்டுவிடலாம் எனக் குறிப்பாசிரியர்கூறிய கருத்து நன்குபுலப்படவில்லை. புலிபோற்றிவா என்பது தனக்குத் தீங்குசெய்யாமற் போற்றிவரப்படுதல்பற்றிப் புலி செயப்படுபொருளாயும்; போற்றிவருதற்குக் காரணமாதல்பற்றி ஏதுப்பொருளாயும் கொள்ளப்படுதலால் இரண்டுபொருளும் ஒருபொருட்கண்ணே வந்தனவேயாம். புலியைப்போற்றிவா என்னும் இரண்டாவதற்குப் பொருள் 'உனக்குத் தீங்குசெய்யாமற் புலியைப்போற்றிவா' என்பதன்றி, வேறொன்று அதற்குத்தீங்குசெய்யாமற் புலியைப் போற்றிவா என்பதன்று. ஆதலால் இதன்கட் சந்தர்ப்பத்தாற் கொள்ளக்கிடந்தபொருள் யாது மில்லை. பொருண்மயங்காது உருபுமாத்திரம் மயங்கியதாகக் கொள்ளிற் குறிப்பாசிரியர்பொருள் பொருந்தும். இது பொருண்மயக்கமாதலிற் பொருந்தாது. ஆதலின் இச்சூத்திர மெற்றுக்கென்னு மாக்ஷேபமும் ஈண்டுத் தோன்றுது. இதன்கட் டொகை என வந்தமையே குறிப்பாசிரியர்வெறுப்புக்குக் காரணம்போலும்.

இனி, "குத்தொக வருஉங் கொடையெதிர் கிளவி
அத்தொகை யாறற் குரித்து மாகும்"

என்பது சூத்திரம். இச்சூத்திரந் தொகைவிதியன்றென்பதை மாற்றுதற்காகப்போலும் முற்சூத்திரங்களால் 'நாகர்க்குப்பலிகொடுத்தான்,' 'நாகர்பலிகொடுத்தான்' என்று இரண்டுவகையாகப் பிரயோகம்வாலாமென்றுதெரிய நாகரதுபலிகொடுத்தான் என்றும் வரலாமென்பதை இச்சூத்திரம் விதிக்கின்றது என்று குறிப்பாசிரியர் கூறினர். இச்சூத்திரத்தின்முதலடிக்குக் குவ்வுருபு தொகும்படிவருகின்ற கொடையெதிர் பொருண்மையையுணர்த்துந் தொகைச்சொல் என்று பொருள்கொள்ளப்படும். கொடையெதிர்பொருண்மையில்வருந் தொகை எனவே அப்பொருட்கண் தொக்க தொகை என்பது கருத்தாயிற்று. ஆகவே கொடையெதிர்கிளவி என்பது ஈண்டுக் கொடுத்தலென்னும் வருமொழியைக் குறித்ததன்று என்பது பெற்றும். கொடையெதிர்தல் என்பதற்குச் சேனவரையர் கொடையைவிரும்பி மேற்கோடல் என்று பொருள் கூறியதனுற் கொடையெதிர்தல் சேர்தல் என்பது பெறப்படும். அன்றியும் நச்சினர்க்கினியர் நாகர்க்குநேர்ந்தபலி எனவே அது பிறர்க்காகாது அவருடைமையாயிற்றாதலின் ஆண்டு ஆறுவதும் உரித்தாகப்பெற்றது. சாத்தற்குநேர்ந்த சோறென்புழி அது பிறர்க்குமாதலின் ஆண்டு

ஆறுருவது நில்லாது. தெய்வமல்லாதாரினுஞ் சிறந்தார்க்குநேர்ந்ததேல் ஆண்டாறுவது வரும் என்பதுணர்க என்று விளங்கக்கூறியதாலும் அது பெறப்படும். உரையாசிரியர்க்கு மிதுவே கருத்தாதல் நாகர்பலிகொடுத்தான் என உதாரணங்காட்டாது நாகர்பலி என உதாரணங்காட்டியதாலறியப்படும். அவர் ஆண்டு நாகர்க்குப்பலி என ஆறுருவது தொக்கு நின்றது என்றது குத்தொக என்பதை விளங்கவைத்ததேயாம். அன்றிக் குறிப்பாசிரியர்கருத்தின்படி தொக்குவிரியும் என்பதை உணர்த்தக்கூறியவரல்லர். இன்னும் கொடையெதிர்தல் நேர்தல் என்பதே அவர்க்குங் கருத்தாதல், "நாகர்பலி என்பது அவர்க்குத் திரிபில்லாமையின் நாகரது பலியென உடைமைக்கிழமை செப்பலாயிற்று" என அவர் கூறியதனு லறியக்கிடக்கின்றது. இக்கருத்தையோர்ந்தே சேனவரையர் 'நாகர்க்குக் கொடுத்தலை விரும்பி மேற்கொண்டவழி யவர்க்கஃ துடைமையாதலிற் கிழமைப்பொருட்குரிய உருபாற்கூறினும் அமையும் என்றவாறு' என விளங்கக்கூறினர். இதனையுணராது குறிப்பாசிரியர் பாகூஷாந்தரப்பொருளென்றது தவறேயாம். உரையாசிரியர் 'கொடையெதிர்க்கூநின்றவழி' என்றது கருத்துப்பொருளேயாம். அதற்குக் கொடையெதிர்பொருளுற்றுநின்றவழி என்பது பொருள். நாகர்க்குப் பலிகொடுத்தான் நாகரதுபலிகொடுத்தான் என்பது தொடர்மொழி மயக்கமாதலின் அது 'ஏனையுருபு மன்ன மரபின' என்னுஞ் சூத்திரத்தான் முடிக்கப்படும். அச்சூத்திரத்தின்கண் 'அவட்குக் குற்றேவல் செய்யும் அவளது குற்றேவல்செய்யும்' எனச் சேனவரையரும் உதாரணங்காட்டுதல் காண்க. நாகர்பலி என்பது தொக்குவருமன்றோ வெனின், ஆண்டுக் குவ்வுருபுக்கு முடிபு கொடுத்தான் என்பதன்று; நாகர்க்கு நேர்ந்த பலி என விரிதலின் நேர்தலே யதற்கு முடிபாம். இது போல்வனவற்றை மத்தியபதலோபன் என்றும் நாகர்க்குப் பலிகொடுத்தான் என்பதுபோல்வனவற்றை உபபதவிபத்தி யென்றும் பிரயோக விவேகநூலாரும் கூறுதல் காண்க. ஆதலின் இதனுள்ளும் தொக என்பது சமாசனைக்குறித்து வந்ததென்பதே துணிபாம்.

இனி, "துச்சக் கிளவிக் கைந்து மிரண்டு
மெச்ச மிலவே பொருள்வயி னான"

என்பது சூத்திரம். இதன்கட் பொருள்வயினான என்பதற்குப் பொருட்கண் என்று உரையாசிரியரும், ஏனையோர் வேற்றுமைதொக அதன் பொருள் நின்றவழி என்றும் உரைத்தனர்; இவற்றுள் உரையாசிரியர்

பொருளே பொருத்தமுடைத்தென்று குறிப்பாசிரியர் கூறியுள்ளார். உரையாசிரியர் உரைக்கண் அப்பொருள் காணப்படவில்லை. ஆயினும் அப்பொருள், தொகை என்பதை விலக்காது. ஏனெனின் "தொகை வருகாலை" என்பதை யாவற்றிற்கும் கூட்டுக என முற்கூறினாராதலிற் றொகையதிகாரமென்பது பெறுதுமாதலின். அன்றியும், பொருண்மயக்க மென்றதனாற் றொடர்க்கண் என்பது துணிபாகாது; தொகைக்கண்ணும் வருதலின். இனி, ஐந்து மிரண்டு மெச்சமில என்றதனால் ஐந்தும்வரும் இரண்டும்வரும் என்பது பெறப்படுதலின் உம்மைகள் எச்சவும்மைக ளாயும்நின்று தொகைவிரிக்கண்வரும் மயக்கத்தையே காட்டலானும் அது நன்கு துணிபாம். தொடர்விரிமயக்கமாயின், ஆசிரியர் ஐந்தன் பொருள் இரண்டாவதாற்றோன்றும் எனக் கூறுவார்; பின் "இதன திதுவிற் றென்னுங் கிளவியும்........நான்கனுருபிற் றொன்னெறி மரபின தோன்ற லாறே" எனக் கூறினாற்போல என்பது. ஆசிரியர் "கரும மல்லாச் சார்பென் கிளவிக்—குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை" என்பதுமுதலாக வருஞ் சூத்திரங்களிலெல்லாம் உம்மை கொடுத்தது தொகைவிரிமயக்கமென்பதைப் புலப்படுத்தற்கேயாம். இச் சூத்திரமும் தொகைவிரிமயக்கங்கூறியதென்பதே துணிபாம்.

இனி "உருபுதொகவருதலும்" என்பதில் வரும் "தொக" என்ப தும் "மெய்யுருபு தொகா விறுதி யான" என்பதில் வரும் "தொகா" வென்பதும் சமாசனையே யுணர்த்துமென்பது செந்தமிழ் ௨௬-ந்தொகுதி ௩-ம் பகுதியில் வெளிவந்த "தொகைநிலை" என்னும் பொருளுரைநோக்கி அறிக.

இதுகாறுங் கூறியவாற்றால் "தொகை, தொக, தொகா" என்பன சமாசனையேயுணர்த்திவந்தனவென்பது வலியுறுத்தப்பட்டது. ஆதலின், அவைகள் சமாசனையுணர்த்திவந்தனவன்றெனக் குறிப்பாசிரியர்கூறியது பொருந்தாதென்பது.

இன்னும் "நாகர்பலி," "முறைக்குத்து," "காட்டியானை" என்னுந் தொகைகள் உருபும் பொருளும் விரிதலிற் குறிப்பாசிரியர் உருபும் பொருளும் விரிவன ஒன்றுமின்றெனக்கூறியதூஉம் பொருந்தாதென்க.

சி. கணேசையர்.

# அகலிகை வெண்பா.

### மூன்றும் பதிப்புக்கு உப்யோகமாகச் செய்திருக்கிற

## திருத்தங்களும் புதுப்பாட்டுக்களும்*

[குறிப்பு:—இவை, மூன்றும்பதிப்பு வெளியாகாவிட்டாலும், பயன் படாதுபோகாதபடி, இங்கே வெளியிடப்படுகின்றன. இரண்டாம்பதிப்புப் புத்தகமுடையவர்கள் திருத்தங்களைச் செய்யவேண்டிய இடங்களிற் செய்து கொள்ளலும் புதுப்பாட்டுக்களைச் சேர்க்கவேண்டிய இடங்களிற் சேர்த்துக் கொள்ளலும் செய்யலாம்.]

### திருத்தங்கள்.

xvii-ம் பக்கம் 22-ம் வரியில்

தேகநாயகியை என்றிருப்பதை, கதாநாயகியை எனவும்;

xxxi-ம் பக்கம் 7-ம் வரியில் vii என்றிருப்பதை, xi எனவும்;

ஷை பக்கம் 10-ம் வரியில் xxxiv என்றிருப்பதை, xxxv எனவும்,

3-ம் பக்கம் 14-வது பாட்டில்

யாவும் முகத்துள நன்கேய்ந்து, என்றிருப்பதை,

யாவும் முகத்தும் உளவே. எனவும்;

4-ம் பக்கம் 20-வது பாட்டில்

யானுள் பகற்சசியா னுள் என்றிருப்பதை,

ஆனுள் பகற்சசிபோல் ஆங்கு. எனவும்;

(ஆங்கு - அந்தச் சுத்த வானத்தில்)

5-ம் பக்கம் 22-ம் பாட்டு

எனக்கு, மரத்துளுயர் வேய்தாருப் போல், ஆன்<br>
இனத்துள் உயர்தேனு என்ன—வனப்பார்<br>
மணியுளுயர் சிந்தா மணியேபோல், மாதர்<br>
மணியுளுயர் மாதுரியள் மற்று. என்றிருப்பதை,

தருவுளுயர் கற்ப தருவென்ன, ஆனுள்<br>
சுரபியென, மிக்கபெருஞ் சோதி—அருமணியுள்<br>
மாசிலாச் சிந்தா மணியேபோற், பெண்மணியுள்<br>
ஏசிலாத் தையலுளாள் எற்கு. எனவும்;

---

*All rights reserved by the author.

8-ம் பக்கம், 40-ம் பாட்டில்,

பெண்ணமுதாற் றூன்தீரும் பெற்றியது, என்றிருப்பதை,

பெண்ணமுதாற் பேர்தலன்றிப் போது, எனவும்;

ஷை பக்கம் 43-ம் பாட்டில்

உற்றூர் செலப்பணித்து என்றிருப்பதை,

உற்றூர்ச் செலப்பணித்து எனவும்;

9-ம் பக்கம் 48-ம் பாட்டில்

நிவேதனமாப் பூசிக்கு நீள்தருக்கள் என்னே!

விவேகமுறீ இத் தாம்உளவோ மிக்கு! என்றிருப்பதை

நிவேதனம தாமரங்கள் நேர்ந்தெனைப்பூ சிக்கும்.

விவேகமுளவோ இவைகள் மிக்கு? எனவும்;

10-ம் பக்கம், 53-ம் பாட்டில்,

வண்டிசைக்கும் பாட்டேதே வாரப்பாட் டா,அரற்குத்

தொண்டியற்றும் பூஎப்போ தும். என்றிருப்பதை,

தேசின் அளி பாட்டிசைத்தல் தேவாரப் பாட்டாகப்

பூசைசெயும் ஈசனுக்குப் போது. எனவும்;

13-ம் பக்கம், 72-ம் பாட்டில்,

இருள் அகல, ஓர்விளக்கு. என்றிருப்பதை,

இருளைவிழுங் கோர்விளக்கு. எனவும்;

15-ம் பக்கம், 81-ம் பாட்டில்,

கொப்பாதல் இல்லையென்றாள் என்றிருப்பதை,

கொப்பாகு மோஎன்றான். எனவும்;

19-ம் பக்கம் 106-ம் பாட்டில்,

வெய்வியனை என்றிருப்பதை, வெய்யவினை எனவும்;

ஷை பக்கம் 107-ம் பாட்டில்,

மதனன் இழை துன்பம், என்றிருப்பதை,

மதனின்உறு துன்பம் எனவும்;

24-ம் பக்கம் 136-ம் பாட்டில்,

ஓவேன்யான்; ஓவேன்; என்றிருப்பதை,

ஓவவிடேன்; என்றும். எனவும்;

25-ம் பக்கம் 144-ம் பாட்டில்,

பொன்றாமுடல்தன்னில் என்றிருப்பதை,
பொன்றும் உடலில் எனவும்;
நன்றுமிக என்றறிஞர் நாட்டினரால்; என்றிருப்பதை,
நன்றென் றறிஞர்மிலே நாட்டினரால்; எனவும்;

26-ம் பக்கம், 146-ம் பாட்டில்,

தோல்வி,வென்றி; வெவ்விழவு, நற்பேறு;
சாவு, நித்த வாழ்வு; சரதம். என்றிருப்பதை,
தோல்வியுமே, வென்றி;இழவும், பேறு;
சாவும், நித்தவாழ்வு; சரதம். எனவும்;

ஷ பக்கம், 147-ம் பாட்டில்,

மூதிய அறிவாளர் முறை. என்றிருப்பதை,
மூதிரும் அறிவாளர் முறை. எனவும் ;

32-ம் பக்கம், 184-ம் பாட்டில்

'கொள்கநிற்காய்' என்முன் மிக்கோன். என்றிருப்பதை,
கொள்க,நிற்கா தோடு'கென்முன் கோன். எனவும் ;
(கோன் - தலைவன்; கௌதமரைக்குறித்தது).

37-ம் பக்கம். 211-ம் பாட்டில்,

துன்புறுவேன், என்றிருப்பதை, துன்பகலேன், எனவும்;

ஷ பக்கம், 212-ம் பாட்டில்,

கெல்லை யில்லை, என்றிருப்பதை, கெல்லையிலை எனவும் ;
துகளைத் துடைத்து முன்போல் என்றிருப்பதை,
துகள்துடைத்துத் தொன்மைபோல் எனவும்;

ஷ பக்கம் 213-ம் பாட்டில்,

துற்முள்அப் பெண். என்றிருப்பதை,
துற்முள் பெரிது. எனவும்;

39-ம் பக்கம், 221-ம் பாட்டில்,

வந்து? என்றிருப்பதை, மற்று? எனவும்;

40-ம் பக்கம், 16-ம் வரியில்,

விஸ்வாமித்திர என்றிருப்பதை, விசுவாமித்திர எனவும் ;

41-ம் பக்கம், 234-ம்பாட்டில்,

எய்தரிதோ? சொல். என்றிருப்பதை, எய்தலரிதோ? எனவும்;

ஷை பக்கம், 235-ம் பாட்டில்,

தொன்மெய்யைப் போன்றதனிற் றூய்தாய்க், கெடாததாய்,
மன்மெய்யைப் பெற்றுள் மகிழ்ந்து. என்றிருப்பதை,

தொன்மெய் ;த்தே,அம்மெயினும் தூய்தாய்க், கெடாததாய்
மஃமெய்உற்றுள், வல்வில்இரா மா. எனவும்;

42-ம் பக்கம், 241-ம் பாட்டில்,

பேறுமுளவோ? என்றிருப்பதை, பேறுமுளதோ ? எனவும்;

46-ம் பக்கம் 9-ம் வரியில்,

கிர்த்தன என்றிருப்பதை, நர்த்தன எனவும்;

48-ம் பக்கம் 22-ம் வரியில்,

அதற்கு என்றிருப்பதை அததற்கு எனவும்;

## அநுபந்தம்.

1-ம் பக்கம் 8-ம் வரியில்

போது"கௌதமன் என்றிருப்பதை,

போ.து அவர்கள் "கௌதமன் எனவும்;

ஷை பக்கம் 19-ம் வரியில்,

அவர்கள் கூறினர்கள் என்றிருப்பதை, கூறினர்கள் எனவும்;

6-ம் பக்கம் 2-ம் வரியில்

இவர்காதற் கேள்வன் என்றிருப்பதை,

இவருசைக் கேள்வன் எனவும்;

(இவறுதல்-மிகுதல், சீவக. 966.)

6-ம் பக்கம் 3-ம் வரியில்,

பெற்றிலே மென்றூே, என்றிருப்பதை

பெற்றிலே மென்றே எனவும்;

ஷை பக்கம் 5-ம் வரியில்,

பசந்தாள் என்றிருப்பதை, கறுத்தாள் எனவும்;

திருத்திக்கொள்க.

(இப்பாட்டு, "ஈசனுர் விழியில் வெந்தான்" என்னும் கம்பராமாயண கவிபோல்வது).

## புதுப்பாட்டுக்கள்.

இருளில்எதிர் ஏந்திழையார் இன்மெய்தம் மெய்யை
மருவில்உடன் நீங்குவர்கன் மக்கள்;—பெரிய
பழியிதென்று பாராது பாதகர்கள் பற்றித்
தழுவியன்றி விட்டுவிடார் தாரம்.

இப்பாட்டு 51-ம் பாட்டின்பின் சேர்ப்பது.

---

தளிர்க்கையினால் வாஎன்று சைகைசெய்து, வாயால்
விளித்திடல்போல் மென்மலர்வாய் விண்டின்—அளித்தொனியால்
கூவிவர வேற்கஎதிர் கொள்மாதர் போல்வ, வந்தால்
காவில்அலை கொம்புகொடிகள்.

இது 51-ம் பாட்டுக்குப்பின் சேர்ப்பது. வந்து—காற்று.

---

நாடிவரும் பாவலர்க்குப் பைம்பொன்னைத் தானநீ
ரோடுதவும் காவலர்கள் ஒக்குமே—தேடிவரும்
பாங்குடைய பாட்டளிக்குப் பைந்தாதைச் செந்தேனோ
டாங்குதவும் இக்கா வலர்.

இது 52-ம் பாட்டுக்குப்பின் சேர்ப்பது. காவலர்—கா(த்தல்)வ(ல்)லர்—அரசர். காவலர்—கா (—வனம்) அலர் (—மலர்).

---

குடக்கண் இரவிஒளி கூர்திகிரி யாக,கீழ்
இடக்கண் மதிவளையா, ஏமப்—படக்குநேர்
வாகாய அந்திச்செவ் வானா, ஒளிர்நீல
ஆகாயம் நீலமால் ஆம்.

இது 60-ம் பாட்டுக்குப்பின் சேர்ப்பது.

குடக்கண்—மேற்றிசையில். திகிரி—சக்கரம். கீழ்இடக்கண்—கீழ்த்திசையில். வளை—சங்கு. ஏமப்படம்—பொன்வஸ்திரம்—பீதாம்பரம். வாகாய—அழகான. ஆக என்பது மூன்றிடத்தும் ஆ என நின்றது.

சூரியன் மேற்றிசையிலும் சந்திரன் கீழ்த்திசையிலும் விளங்கப் பொலியும் மாலைநேரத்துச் செவ்வானம் பாந்த நீலவானம், சங்க சக்கர பீதாம்பரதாரியான நீலமாலை நேர்வதென்பது கருத்து.

---

நாவேவல் வில்லாக, 'நச்சேன்' எனுமொழியே
ஏவா, என் ஆவி இலக்காகப்,—பாவாய் நீ
சொல்லுதலே எய்தலாத், துன்புறுந்தல் புண்செயலாக்
கொல்லுதலோ உன்றன் குறிப்பு?

இது 108-ம் பாட்டுக்குப்பின் சேர்ப்பது.

---

அமிர்தம் அடைந்திட யான் ஆழிகடை அந்நாள்
நிமிர்வெவ் விடம் எழுதல் நேரும்,—தமியனேன்
உன்காதல் எய்தமுயல் வுற்றிடும்இந் நாள்உனது
வன்கோபம் மேலெழுதல் மற்று.

பொங்கி எழுந்தவிடம் போயொழிய, யான்வேட்ட
துங்க அமிழ்து பின்பு தோன்றியாங்—கிங்குனது
வன்கோபம் மாற,யான் வாஞ்சித் திடும்உன்றன்
இன்காதல் எய்தும் இனி.

இவையிரண்டும் 118-ம் பாட்டுக்குப்பின் சேர்ப்பன.

---

மதிபோல் மனம்கவரும் மாதே! உனக்கும்
மதிபோல் உளதோர் மறு;மற்—றது தான்,
நிறை;அதனை என்பொருட்டு நீக்கில், மறுவில்
நிறைமதியை நேருவாய் நீ.

இது 132-ம் பாட்டுக்குப்பின் சேர்ப்பது.

இருவரமே வேண்டும்;ஒன்றே ஈந்திடினும் நன்றவ்
வரம்எவை?கூ றென்னில், வருக்கேன்:—ஒருவரம்யான்
நின்முகத்தே முத்தமிட நேருதல்;மற் றொன்றுநீ
என்முகத்தே முத்த மிடல்.

இது 133-ம் பாட்டுக்குப்பின் சேர்ப்பது.

---

## அகலிகைவெண்பாத்திருத்தமும் புதுப்பாட்டும் ௩கள

ஆறில் ஒருகூ றாசற் குரியதெனக்
கூறும் முறை,உன் கொழுநன்ஓர்—கூறு
தவத்தே எனக்குத் தால்போல், நிறையில்
உவப்போ டொருகூ றுதவு.

இது 163-ம் பாட்டுக்குப்பின் சேர்ப்பது.

---

தவத்துக் கிடையூறு சாராது காப்பார்
தவத்திற் பகுதிபெறுர்; சாற்றும்—தவத்தின்
பயனில்ஓர் பங்குறுவர் பார்த்திபர்கள்: கற்பின்
பயனில்ஓர் பங்கேஉன் பங்கு.

வேலேவேறு கூலிவேறுதல்போலத், தவமும் கற்பும் வேறு, அவற்றின் பலன் வேறு என்பது தெளிய உணர்த்தப்பட்டது.

காக்குங் கடனுடையாய் காவாது கற்பதனை
நீக்குங் கொடுமை நினைந்தனையால்!—தேக்குநீர்
பாய்ச் செழித்துவளர் பைங்கூழைச் சூழ்வேலி
மேயப் புகுந்த விதம்.

இவையிரண்டும் 168-ம் பாட்டின்பின் சேர்ப்பன.

---

நிலமேல் விழுந்துருண்டேன்! நெட்டுயிர்த்தேன்! மண்ணைத்
தலைமேல் எறிந்தேன்! தவித்தேன்!—தலைவய்
மயிர்புய்த் தெறிந்தேன்! மறுகி அழுதேன்!
உயிர்செற் றிடப்படுவா ரொத்து.

புய்த்தல்-பிடுங்குதல்; பிய்த்தல் என வழங்குகின்றது. செறுதல்-செற்றல் இரண்டும் கொல்லல் குறிப்பன.

இப்பாட்டு அகலிகைவெண்பா அநுபந்தம் 11-ம் பக்கத்தில் 1034 என்ற எண் உள்ள பாட்டுக்குப்பின் சேர்ப்பது.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

# மதிப்புரை.

வியாபாரி:—இதுவும் ஒரு மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. அகலத்தாளில் 12-பக்கங்களளவுள்ளது. வியாபாரிகளுக்கும், விளம்பரஞ்செய்வோருக்கும் மிகப் பயன்படத்தக்கது. வர்த்தகமுறைகளைக்குறித்த கட்டுரைகள் இதில் இனியவாக எழுதப்படுகின்றன. நமது நாட்டு வாணிகத்துறையில் இது சிறந்த முன்னேற்றமளிக்கவல்லது. திரு. K. S. சுந்தரம் அவர்கள் இதன் கௌரவ ஆசிரியராவர். இதன் வருடச்சந்தா அணா எட்டேயாகும். கிடைக்குமிடம்:—'மானேஜர் வியாபாரி பத்திரிகாலயம், ஜார்ஜ்டவுன், சென்னை.'

செந்தமிழ்ப்பானு:—இது திருவாரூரினின்று மாதமொருமுறை வெளிவருவது. திரு. வை. செல்லையாசெட்டியாரவர்கள் இதன் பத்திராதிபராவர். தமிழ்மொழியும் சைவசமயமும்பற்றிய பலகட்டுரைகள் இதில் வரையப்பெறுகின்றன, வருடச்சந்தா ரூ. 2. வேண்டுவோர் 'திரு. வை. செல்லையாசெட்டியாரவர்கள், பத்திராதிபர், செந்தமிழ்ப்பானு, திருவாரூர்' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

அருணகிரி:—இது, திரு. சி. ராம. ராமநாதமுதலியாரவர்களை ஆசிரியராகப்பெற்று வெளிவருவது. ஒவ்வொரு சஞ்சிகையும் தடித்த காயிதத்தில் நன்றாக அச்சிடப்பட்ட 32-பக்கங்களளவுள்ளது. வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூ. 2-8-0. வெளிநாடுகளுக்கு ரூ. 3. விலாசம், 'அருணகிரி பத்திரிகாலயம்' பள்ளத்தூர், இராமநாதபுரம் ஜில்லா.

விமோசனம்:—இது ஸ்ரீமான் சக்ரவர்த்தி. ராஜகோபாலாசாரியரவர்களால், திருச்செங்கோட்டுப் புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தினின்று மாதந்தோறும் வெளியிடப்பெறுவது. மதுவிலக்குப்பிரசாரம் போன்ற இக்காலத்துக் கனுகுணமான தேசத்தொண்டியற்றுவதையே தன் நன்னோக்கமாகக்கொண்டது. இதிற் பற்பல அரியவிஷயங்கள் எளியமுறையில் விளக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் ஒழுக்கத்தைச் சீர்திருத்துவதில் இது மிகவும் பயனளிக்கவல்லது. வருடச்சந்தா ரூ. 1, வேண்டுவோர் திருச்செங்கோட்டுப் புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்திற்கு எழுதிப் பெறலாம்.

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

[உஅ0-ம் பக்கத்தொடர்ச்சி.]

390-வது சூத்திரம். **கூறிய கிளவிப் பொருணிலை யல்ல**
**வேறுபிற தோன்றினு மவற்றொடுங் கொளலே.**

பாடபேதம்:—இளம்பூரணத்தில் அல்ல என்பதற்குப் பிரதியாக அல்லது என்றும், அவற்றொடும் என்பதற்குப்பிரதியாக அவற்றொடு என்றும் உள்ளன.

394-வது சூத்திரம். **மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.**

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—மொழிப்பொருள்கள் என்பன அச்சொல்லப் பட்ட பொருள்கள் அப்பொருட்கட்டே என்றவாறும்.

சேனாவரையர்:-உறு, தவ முதலாயினசொற்கு மிகுதிமுதலாயின பொருளாதல் வாலாற்றுமுறைமைபாற் கொள்வதல்லது, அவை அப் பொருளவாதற்குக் காரணம் விளங்கத்தோன்றா எ - று.

நச்சினார்க்கினியர்:—நால்வகைச்சொல்லுக்கும் பொருளை அறி வித்துநின்றதோர் காரணம் உண்டாந்தன்மை நுண்ணுணர்வில்லா தோர்க்கு மரபென்றுகொள்வதல்லது விளங்கத்தோன்றா எ - று.

நச்சினார்க்கினியர் உரிச்சொல்லுக்கு என்று கூறாது நால்வகைச் சொல்லுக்கும் என்று ஏன் கூறினர் என்பது கவனிக்கத்தக்கது.

உரியியல் முற்றிற்று.

———

## எச்சவியல்.

397-வது சூத்திரம். இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொல்லென் றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே.

இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார்* இவர்கள் நால்வரும் ஒரேவிதமாகப் பொருள் கொண்டனர்.

இங்கு, 'திரிசொல் என்பது செய்யுளின்பநோக்கி அவ்வியற்சொற்களை அவ்வாய்பாடுதிரித்து வேறுவாய்பாட்டவாக்குஞ் செய்யுளுடைய சொல்' என்று உரையாசிரியரும், 399-வதுசூத்திரவுரையில் 'திரித்துக்கொண்டத் இயற்கைச்சொல்லான இன்பம்பெறச் செய்யுளீட்டலாகாமையன்றே; அதனாற் றிரிசொல்லெனவே செய்யுட் குரித்தாதலும் பெற்றாம்' என்று சேனாவரையரும், திரிசொல்லுக்குக் கூறும் இலக்கணம் கவனிக்கத்தக்கது.

திசைச்சொல்லுள்ளும் வடசொல்லுள்ளும் செய்யுட்குரித்தாய்வருவது பெயர்ச்சொல்லே என்றார் சேனாவரையர். 'திசைச்சொல்லும் வடசொல்லும் பெரும்பான்மை பெயர்ப்பெயராயுஞ் சிறுபான்மை தொழிற்பெயராயும் வருதலன்றி ஏனையவாய் வாரா என்றும், பிறபாடைச்சொற்கள் ஈட்டுதற்கு உரியவன்றிச் சிறுபான்மை வருமாயின், அவை செப்பு, குளிரு, சிக்கு, அந்தோ என்றாற்போல்வன பிறவுமாம்' என்றுங் கூறினர் நச்சினார்க்கினியர். 'திரிசொல்லுந் திசைச்சொல்லும் பெரும்பான்மை பெயரும், சிறுபான்மை வினையுமாகி வரும்' என்றார் தெய்வச்சிலையார்.

அவற்றுள்,

398-வது சூத்திரம். இயற்சொற் றமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.

---

* தெய்வச்சிலையாரது காலம் தெளிவாய்ப் புலப்படாததாலும், இதுவரையிற் குறிப்பில் உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவர்களின் கருத்தை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறினமையானும், தெய்வச்சிலையார் கருத்து நச்சினார்க்கினியர்கருத்தின்பின்னர்க் கூறப்பட்டதேயன்றித் தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியருக்குப் பிற்பட்டவர் என்ற துணிபாலன்று.

இச்சூத்திரத்தின்பொருளைக் கூறுமிடத்துச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் தம்பொருள் என்பதற்குமுன் கொடுந்தமிழ்நிலத்து என்ற சொல்லை வருவித்துக்கொண்டனர். உரையாசிரியரும், தெய்வச்சிலையாரும் அவ்வாறு அச்சொல்லை வருவித்துக்கொள்ளாவிடினும் அவர்க்கும் அதுவே கருத்தென்பது அவரது உரையினின்றும் விளங்குகின்றது.

இச்சூத்திரவுரையிற் செந்தமிழ்நிலமாவது 'வையையாற்றின் வடக்கு, மருதயாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின்மேற்கு' என்று உரையாசிரியரும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஒரேவிதமாகச் செந்தமிழ்நிலத்தின் எல்லையைக்கூறினர். தெய்வச்சிலையாரோ 'செந்தமிழ்நாடாவது வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் என்ப. இவ்வாறு உரைத்தற்கு ஓர் இலக்கணங் காணாமையானும், வையையாற்றின் தெற்காகிய கொற்கையும், கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூரும், மருதயாற்றின் வடக்காகிய காஞ்சியும் தமிழ்திரிநிலமாதல்வேண்டுமாதலானும், அஃது உரையன்று என்பார் உரைக்குமாறு—'வடவேங்கடந் தென்குமரி' (தொல். எழுத். பாயிரம்) என்றமையானும், இதனுள் தமிழ்கூறும் நல்லுலகமென விசேடித்தமையானும், கிழக்கும் மேற்கும் எல்லைகூறாது தெற்கெல்லைகூறியவதனாற் குமரியின் தெற்காகியநாடுகளையொழித்து வேங்கடமலையின் தெற்கும், குமரியின் வடக்கும், குணகடலின் மேற்கும், குடகடலின் கிழக்குமாகிய நிலம் செந்தமிழ்நிலமென்றுரைப்ப' என்று கூறினர்.

சேனாவரையர் இங்கு 'நீரென்பது ஆரியச்சிதைவாயினும் அப்பொருட்கு அதுவே சொல்லாய்ச் செந்தமிழ்நிலத்தும் கொடுந்தமிழ்நிலத்தும் வழங்கப்படுதலான் இயற்சொல்லாயிற்று' என்று கூறினர். ஆனால் ஆரியத்திலுள்ள 'நீர' (நீர) என்பது தமிழ்மொழியினின்றும் வந்த சொல்லென்பது மொழிநூல்வல்லோரின் துணிபு.

பாடபேதம்.

உரையாசிரியர்:—வழாஅமை யிசைக்கும்.

சேனாவரையர், நச்சினார்க்கினியர்:—வழாமை யிசைக்கும்.

தெய்வச்சிலையார்:—வழாம லிசைக்கும்.

399-வது ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
சூத்திரம். வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி.

இச்சூத்திரவுரையிற் சேனவரையர் ('விலங்கல், விண்டு என்பன முழுவதுந் திரிந்தன. முழுவதுந் திரிந்தனவற்றைக் கட்டிய வழக்கென்பாருமுளர்' என்று கூறுகின்றனர்.

சேனவரையத்திற் கூறப்பட்ட 'கிள்ளை, மஞ்ஞை யென்பன ஒருசொல் ஒருபொருட்குரித்தாகிய திரிசொல்லாதலின் இருபாற்றென்றல் நிரம்பாதெனின்'என்ற ஆசங்கைக்கு மூலம், ஒருபொருள்குறித்த வேறுகிளவியாயும் வேறுபொருள்குறித்த வொருசொல்லாயும் ஒரேசொல் இருந்தால்தான் அது திரிசொல்லாகும் என்று சூத்திரத்திற்குப் பொருள் என்ற கருத்துப்பற்றி. அவ்வாசங்கைக்கு விடை திரிசொல் லென்பது ஒருபொருள்குறித்த வேறுகிளவியாகவாவது இருக்கும் அல்லது வேறுபொருள்குறித்த வொருசொல்லாகவாவது இருக்கும் என்பதே.

இச்சூத்திரவுரையில் தெய்வச்சிலையார் 'அஃதேல் உரிச்சொல்லோடிதனிடை வேறுபாடு என்னையெனின், உரிச்சொல் குறைச்சொல்லாகி வரும், திரிசொல் முழுச்சொல்லாகிவருமெனக' என்று கூறியது கவனித்தற்கு உரியது.

400-வது செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
சூத்திரம். தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

செந்தமிழ்சேர்ந்த பன்னிரு நிலத்தும் என்பதற்கு உரையாசிரியர் 'செந்தமிழ்நாட்டை அடையும் புடையுங் கிடந்த பன்னிருநிலத்தும்' என்றும், சேனவரையர் 'செந்தமிழ்நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத்தும்' என்றும், நச்சினார்க்கினியர் 'செந்தமிழ்நாட்டைச்சூழ்ந்த பன்னிரண்டுநிலத்தும் பன்னிரண்டையும் புறஞ்சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும்' என்றும், தெய்வச்சிலையார் 'செந்தமிழ்நாட்டைச் சேர்ந்த பன்னிருநிலத்தும்' என்றும் பொருள்கூறினர்.

உரையாசிரியரும், சேனவரையரும் கூறின பன்னிரண்டுநாடுகளுள் பதினொன்று ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா

வடதலை என்றும், பன்னிரண்டாவது உரையாசிரியர் போதுங்கர் நாடு என்றும், சேனாவரையர் பொங்கர் நாடு என்றும் கூறுகின்றனர். ஒரு கால் போதுங்கர் என்பதில் 'து' என்பது விடுபட்டுப் போங்கர் என்று எழுதப்பட்டிருக்கலாம். தெய்வச்சிலையார்மதப்படி செந்தமிழ்நிலத்தின் எல்லை வேறுதலால் அவர்கூறும் பன்னிரண்டுநாடு 'பழந்தீபம், கொல்லம், கூபகம், சிங்களம், கன்னடம், வடுகம், கலிங்கம், தெலிங்கம், கொங்கணம், துளுவம், குடகம், குன்றகம்' என்பன. உரையாசிரியர், சேனாவரையர் கூறியவாறு பொங்கர்நாடு முதலிய பன்னிரண்டையும், தெய்வச்சிலையார் கூறியவாறு பழந்தீபம் முதலிய பன்னிரண்டையும் நச்சினார்க்கினியர்கூறியுள்ளார். தெய்வச்சிலையார் கூறியுள்ள 'பழந்தீபம், கூபகம், கன்னடம், வடுகம், தெலிங்கம், துளுவம், குன்றகம்' என்பதற்குப் பிரதியாக முறையே 'பழந்தீவு, கூபம், கருநடம், வடுகு, தெலுங்கு, துளுவு, கூடம்' என்று நச்சினார்க்கினியர் கூறினர்.

401-வது சூத்திரம். வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

இச்சூத்திரத்திற்கு நால்வரும் பொருள் ஒரேவிதமாகக் கொண்டனர். 'எழுத்தொடு' என்பதற்கு முன் உரையாசிரியர் 'இருதிறத்தார்க்கும் பொதுவாய' என்பதனையும், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'இருசார்மொழிக்கும் பொதுவாகிய' என்பதனையும், தெய்வச்சிலையார் 'தமிழ்மொழிக்குரிய' என்பதனையும் வருவித்துக்கொண்டனர்.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் 'வடசொல்லாவது வடசொல்லோடொக்குந் தமிழ்ச்சொல்லென்றால் உரையாசிரியரெனின்' என்று கூறி 'அற்றன்று; ஒக்குமென்று சொல்லப்படுவன ஒருபுடையானொப்புமையும வேற்றுமைபுமுடைமையான், இரண்டாகல்வேண்டும். இவை எழுத்தானும பொருளானும் வேறுபாடின்மையாகிய ஒருசொல்லிலக்கணமுடைமையான இரண்டுசொல்லெனப்படா; அதனான் ஒத்தல்யாண்டையது, ஒருசொல்லேயாமென்பது'[1] என்று அவரை மறுத்துள்ளார். இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் அவ்வாறு கூறவில்லை, 'இயற்சொற் றிரிசொல்............' (தொல். சொல். 397) என்ற சூத்திர

[1] ஆரியச்சொற்போலுஞ்சொல் என்னாது ஆரியத்தோடு அபின்னமான சொல் என்று உரையாசிரியர் கூறியிருக்கவேண்டும் என்பது சேனாவரையர் கருத்து.

வுரையில் 'வடசொல் என்பது ஆரியச்சொற்போலுஞ்சொல்' என்று கூறியுள்ளார். ஆனால் அவருடைய கருத்து, சேனாவரையர் கருதிய வாறே என்பது இச்சூத்திரவுரையில் உள்ள 'குங்குமம் என்றவிடத்து இருசார்க்கும் பொது எழுத்தினான் வருதலுடைமையும் ஆரியத்தா னும் தமிழானும் ஒருபொருட்கே பெயராகி வழங்கிவருதலுடைமை யும் அறிக' என்ற சொற்றொடரால் அறியப்படுகின்றது.

இளம்பூரணத்தில், 'உலகம், நற்குணம்' என்பனவும், நச்சினார்க் கினியத்திற் 'காரியம், உற்பவம்' என்பனவும் இச்சூத்திரத்துக்கு உதார ணங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை மேல்வருஞ் சூத்திரத்துக் குத்தான் உதாரணமாகும். இளம்பூரணத்தில் 'உலகம், நற்குணம்' என்ற இரண்டும் பின்னர் ஏட்டிற் சேர்க்கப்பட்டனவோ என்றும், சற் குணம் என்பது நற்குணம் என்று எழுத்துத்தவறால் மாறுபட்டு எழு தப்பட்டதோ என்றும் ஐயம், சேனாவரையர் அவற்றை மறுக்காததால், உண்டாகின்றது.

நச்சினார்க்கினியத்தில் 'வடவெழுத்தொரீஇ' என்பதற்கு 'உரப்பி யும் எடுத்தும் கனைத்துங் கூறும் வடவெழுத்துக்களின் நீங்கி' என்று பொருள்கொடுத்துள்ளது. உரப்போடு கூடிய எழுத்துக்கள் கவர்க்கம் முதல் பவர்க்கம் முடிய ஐவர்க்கத்திலும் உள்ள இரண்டாம் எழுத்துக் கள்; எடுப்போடுகூடிய எழுத்துக்கள் அவற்றிலேயே மூன்றும் எழுத் துக்கள்; கனைப்போடுகூடிய எழுத்துக்கள் அவற்றிலேயே நான்காம் எழுத்துக்கள்; ஶ, ஷ, ஸ, ஹ இவற்றை மறந்துவிட்டார்போலும்.

வட்டம் முதலிய பாகதச்சொற்களை இச்சூத்திரத்திற்கு உதாரண மாகக் கொடுத்தனர் தெய்வச்சிலையார். அவற்றை மேல்வருஞ்சூத்திரத் திற்கு உதாரணமாகக் கொடுத்தனர் சேனாவரையரும் நச்சினார்க்கினிய ரும். உரையாசிரியர் அவற்றைப்பற்றி இரண்டு சூத்திரங்களிலுங் கூறவில்லை.

இச்சூத்திரத்தில், 'வடசொல்' என்பதனால் இலக்கணவிலக்கியங்க ளில் வழங்கும் ஸம்ஸ்கிருதச்சொல்லை மாத்திரங் குறித்தனரா, அவற் றோடு வடநாட்டிற் பேச்சில்வழங்கும் பாகதச்சொல்லையுங் குறித்தனரா ஆசிரியர் என்பது ஆராயத்தக்கது.

அவற்றுள்,

405-வது நிரனிறை தானே
சூத்திரம். வினையினும் பெயரினு நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.

இச்சூத்திரத்திற்குப்பொருள்:—

உரையாசிரியர்:—இச் சொல்லப்பட்டவற்றுள் நிரனிறையென்று சொல்லப்படுவதியாதோவெனின், வினையினானும் பெயரினானும் ஆராயத் தோன்றிச் சொல் வேறு வேறு நிற்பப் பொருள் வேறு வேறு நின்று உணரப்படும் எ-று.

சேனாவரையர், நச்சினார்க்கினியர்:—அந்நான்கனுள் நிரனிறையாவது வினையானும் பெயரானும் ஆராயத்தோன்றிச் சொல்வேறுநிற்பப் பொருள்வேறு நிற்றலாம் எ—று. தொடர்மொழிப்பொருள் முடிக்குஞ் சொற்கண்ணதாகலான் முடிக்குஞ்சொல்லைப் பொருளென்றார். வினையினும் பெயரினுமென்றதனான், வினைச்சொல்லான் வருவதூஉம், பெயர்ச்சொல்லான் வருவதூஉம், அவ்விருசொல்லான் வருவதூஉ மென நிரனிறை மூன்றாம்.

தெய்வச்சிலையார்:—மேற்சொல்லப்பட்டவற்றுள் நிரனிறையாவது வினையானும் பெயரானும் ஆராயப் புலப்படுஞ்சொற்களைச் சேர நிறுத்தி அவற்றிற்கு முடிபாகவருஞ் சொற்களைச் சேர நிறுத்துதல் எ—று.

உரைகாரர்கள் நால்வருங் கூறுவதை நோக்குமிடத்து, இச்சூத்திரத்தின் கருத்து, ஒரு செய்யுளில் (1) பலவினைகள் ஒருங்கு படிக்கப்பட்டு, அவற்றைத் தழுவும் பெயர்களும் ஒருங்கு படிக்கப்பட்டாலும், (2) பல பெயர்கள் ஒருங்கு படிக்கப்பட்டு, அவற்றை விசேடிக்கும் பல பெயர்கள் ஒருங்கு படிக்கப்பட்டாலும் (3) பல வினைகள் ஒருங்கு படிக்கப்பட்டு அவற்றைத் தழுவும் வினைகள் ஒருங்கு படிக்கப்பட்டாலும், அவற்றை அம்முறையே ஒன்றோடொன்றை அந்நுவயிக்கவேண்டும் என்பதே. இவற்றுள் மூன்றாவதற்கு உதாரணமாக 'மாசு போகவுங் காய்பசி நீங்கவு—கடிபுனன் மூழ்கி யடிசில்கை தொட்டு' என்பதனைச் சேனாவரையரும் நச்சினார்க்கினியருங்கூறியுள்ளார்கள். தெய்வச்சிலையார் 'வினையும் வினையுமாக வருவன உளவேல், வந்தவழிக்கண்டு கொள்க' என்றார். உரையாசிரியர் அதைப்பற்றி ஒன்றுங் கூறவில்லை.

406-வது சுண்ணந் தானே
சூத்திரம். பட்டாங் கமைந்த வீரடி யெண்சீ
ரொட்டுவழி யறிந்து துணித்தன ரியற்றல்.

உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இம்மூவரும் 'சுரையாழ வம்மி மிதப்ப...' என்பதனை மாத்திரம் இச்சூத்திரத்திற்கு உதாரணமாகக் கொடுத்தனர். தெய்வச்சிலையார் அதனோடு 'தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்—வெண்கோழி முட்டை யுடைத் தன்ன மாமேனி—அஞ்சனத் தன்ன பசலை தணிவேமே—வங்கத்துச் சென்றார் வரின்' என்பதனையும் உதாரணமாகக் கொடுத்துள்ளார். மேலும் 'சுரையாழ வம்மி மிதப்ப...' என்பது 'நாற்சீர்க்கண்ணே துணித்து ஒட்டியது' என்றும், 'தெங்கங்காய்...' என்பதனுள் 'எண் சீருள் ஒட்டிவந்தது' என்றும் கூறினர். அதனை நோக்குமிடத்துச் சூத் திரத்திலுள்ள 'ஈரடி யெண்சீர்' என்பதற்கு ஈரடிக்குரிய எண்சீரென்பது பொருளென்றும் ஒட்டுதல் எண்சீருக்குள் இருக்கவேண்டுமேயன்றி ஈரடிகொண்ட எண்சீருக்குள் இருக்கவேண்டுமென்று நியதி யில்லையென்றும் தெய்வச்சிலையார்கருத்தென்று தோன்றுகிறது.

408-வது பொருடேரி மருங்கி
சூத்திரம். னீற்றடி யிறுசீ ரெருத்துவயிற் றிரிபுந்
தோற்றமும் வரையா ரடிமறி யான

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:—அடிமறிப்பொருள்கோள் ஆராயுமிடத்து ஈற்றடி யின் இறுதிச்சீர் எருத்தத்துச்சீராய்க் கிடத்தும் வரையப்படாது எ-று.

சேனாவரையர்:—பொருளாராயுங்கால், அடிமறிச்செய்யுட்கண் ஈற்றடியது இறுதிச்சீர் எருத்தடியிற் சென்றுதிரிதலும் வரையார் எ-று.

நச்சினார்க்கினியர்:—அவ்வடிமறிச் செய்யுளிடத்துப் பொருண் முடிவை ஆராயுமிடத்து அப்பொருண்முடிவினையுடைய அடியில் முடிக்கின்றசீர்க்கு முதற்சீரிடத்துப்பொருளே தன்பொருளாய் இறுஞ்சீர் ஏனையடிகள்போல நோய்முடியாது மீண்டுசென்று முன்னின்றதோர் சொல்லோடே பொருண்முடியுந் தோற்றாவு நீக்கார் ஆசிரியர் எ-று.

தெய்வச்சிலையார்:-பொருள் ஆராயும்வழி ஈற்றடிக்கண்வரும் இறுதிச்சீர் ஈற்றயலடிக்கண் திரிந்துபொருள்படும்நிலைமையும் நீக்கார் எ-று.

சூத்திரத்திலுள்ள ஈற்றடியிறுசீ ரெருத்துவயின் என்பதற்கு உரையாசிரியர் ஈற்றடியின் இறுதிச்சீர் எருத்துச்சீராய்வரின் என்றும், சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் ஈற்றடியது இறுதிச்சீர் எருத்தடியிற்சென்று என்றும், நச்சினார்க்கினியர் ஈற்றடியேருத்துப்போருளே தன் போருளாய்க்கோண்ட இறுதிச்சீர் என்றும் பொருள்கொண்டமை கவனிக்கத்தக்கது. இச்சூத்திரம் 'அடிமறிச் செய்தி யடிநிலை திரிந்து—சீர்நிலை திரியாது தடுமா றும்மே' (தொல். சொல். 407) என்ற முற்சூத்திரத்துக்குப் புறனடைச் சூத்திரமாகையால் சேனாவரையர், தெய்வச்சிலையார் இருவருங்கூறும் பொருளே மேலானது. ஆகையால் 'யானஞ்சுவலென நின்றாங்கு நிற்பவும் பொருள் செல்லுமாகலின் இவ்வாறு திரிதல் பொருந்தாமையின் அவர்க் கது கருத்தன்றென்க' என்று சேனாவரையர் உரையாசிரியரை மறுப்பதும் பொருந்தாம்.

நச்சினார்க்கினியர் 'கூறாய் தோழியாம் வாழு மாறே'என்னுமிடத்து மாறு என்னும் இடைச்சொல் தனக்கோர் பொருளின்றி வாழும்படியையென எருத்துச்சீரின் பொருளையே உணர்த்திற்று என்றார். மாறு என்பது 'அனையை யாகன் மாறே' (புறநா-௨௦, ௨௦) 'நீதுஞ்சாய் மாறே' (புறநா. ௨௨, ௩௮), 'நீ அருளன் மாறே' (புறநா-92, 6) முதலிய இடங்களில் ஏதுப்பொருளில் வருவதால் இவர் மாறு என்பதற்குப் பொருளில்லையென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

[தொடரும்.]

# அரும்பொருள்விளக்க நிகண்டு.

சென்னை சர்வகலாசங்கத்தார் வெளியிட்டுவரும் தமிழ்-அகராதிக்குப் பயன்படும்பொருட்டுச் சென்னை-அரசாங்கக் கையெழுத்துப்புத்தகசாலையிலுள்ள நிகண்டுகளையெல்லாம் யான் பரிசோதிக்க நேர்ந்தது. அப்பொழுது எனக்குக் கிடைத்தவற்றுளொன்றாகும் இவ் அரும்பொருள் விளக்கநிகண்டு இதனை இயற்றியவர் அருமருந்தையதேசிகர் என்பவர். இவர் திருச்செந்தூரிற் சிவப்பிரகாசர் என்பவரது புத்திரராய்த்தோன்றி அவ்வூர் முருகக்கடவுள்பால் அன்புபூண்டு சிறந்த பக்தராய் விளங்கியவர். தமது குருவாகிய தில்லைப் பச்சைக்கந்ததேசிகரது ஆணையை மேற்கொண்டு இந்நூலைச் செய்துமுடித்துத் தில்லைநகர்ப் பெரியோர்கள்முன்னிலையில் இதனை அரங்கேற்றியதாகத் தமது பாயிரத்தில் இந்நூலாசிரியர் கூறுகின்றார். சகம் 1685 சித்திரபானுவருஷம் மாசிமாதம் சிவநிசி தினமாகிய வெள்ளிக்கிழமை நூல் அரங்கேறிய காலமாகப் பாயிரம் உணர்த்துதலின், இந்நூல் இற்றைக்கு 166 வருடங்கட்குமுன் இயற்றப்பெற்றதாகும்.

சூடாமணிநிகண்டு, உரிச்சொல்நிகண்டு, அகராதிநிகண்டு, கயாகர நிகண்டு என்றநூல்களை ஆராய்ந்து இந்நூல் செய்யப்பெற்றதென ஆசிரியர் கூற்றால் உணரக்கிடக்கின்றது. நூலை அமைத்துள்ளது சூடாமணி நிகண்டிற் பதினொராவதாதொகுதியின் முறைமையைப் பின்பற்றியாகும். நூலின்கண்ணுள்ள செய்யுட்டொகை எழுநூறு.

இந்நிகண்டினை யான் பரிசோதித்தற்குப் பிரதிகள் கொடுத்துதவிய அரசாங்கக்கையெழுத்துப்புத்தகசாலைப் பரிபாலகர் வித்தியாவாசஸ்பதி: மகாமகோபாத்தியாய: பிரும்மஸ்ரீ குப்புஸ்வாமிசாஸ்திரிகள் (M A, I E S) அவர்களுக்கு எனது நன்றி உரிமையாகின்றது. கிடைத்தஏட்டுப்பிரதியில் சிற்சில இடங்களிற் செய்யுட்கள்குறைந்தும் பலஇடங்களிற் பாடங்கள் சிதைந்தும் காணப்பட்டமையின் வேறுபிரதிகள்பெறுதற்பொருட்டு, தாக்ஷிணாத்தியகலாநிதி: மகாமகோபாத்தியாய: பிரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள்பாற்சென்று எனது கருத்தைத்தெரிவித்தேன். அவர்கள் தங்களிடமிருந்த ஏட்டுப்பிரதியை மிக்க அன்போடு உதவினார்கள். இப்பேருதவி பெரிதும் பாராட்டுதற்குரியாதகும். இந்நூலைச் 'செந்தமிழ்ப் பிரசுர'மாக வெளியிடுதற்கு அன்புகூர்ந்து இணங்கிய தமிழ்ச்சங்கத்து நிர்வாகக்கழகத்தினர்கள்பால் மிக்கநன்றியுடையனாயிருக்கிறேன்.

சென்னை.<br>15—10—29.

S. வையாபுரிப்பிள்ளை,<br>பதிப்பாசிரியர்,<br>தமிழ்-அகராதி நிலயம்.